# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------

In the Court of the Additional District and Sessions Judge, Fast Track Court, Kumbakonam.

**Sessions Case No. 23/2019**

Deposition of witness for Prosecution P.W. 2

| | | |
|---|---|---|
| Name | : | பாலசுப்ரமணியம் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.02.2020.

நான் தற்சமயம் கும்பகோணம் தாலுக்கா இஞ்சிகொல்லையில் குடியிருக்கிறேன். நான் கும்பகோணம் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணியாற்றுகிறேன். நான் எங்கள் ஊரை சேர்ந்த அசா.1ன் மூத்த மகளை திருமணம் செய்துள்ளேன். என் மனைவியின் தங்கை கணவருடன் கும்பகோணம் ஸ்ரீநகர் காலனியில் குடியிருக்கிறார். என் மைத்துனர் பெயர் சூர்யா. அவர் தற்சமயம் இறந்துவிட்டார். அவர் எம்.எஸ்.சி தாவரவியல் படித்துள்ளார். அவர் இறந்த சமயத்தில் தனியார் கம்பெனியில் வேலை பார்த்தார். எங்கள் தெருவை சேர்ந்த பெருமாள் மகன் முருகன் என்பவருக்கும் என் மைத்துனர் சூர்யாவிற்கும் பிரச்சனை இருந்தது. பெருமாள் மகன் முருகன் என் மைத்துனரை சூர்யாவை அடிக்காமல் விடமாட்டேன் கடைத் தெருவில் சொன்னதாக என் மைத்துனர் கேள்விபட்டுள்ளார்.கடந்த 02.06.2018 அன்று சூர்யாவின் நண்பர்களான நரேஷ், வீரமணி , அஜித் ஆகிய 3 பேரையும் கேட்கவேண்டும் என்று அன்று மதியம் 2 மணியளவில் முருகன் வீட்டிற்கு சூர்யாவும், அவர்களான நரேஷ் வீரமணி, அஜித் ஆகியோர் சென்றுள்ளனர். அப்போது முருகன் வீட்டில் இல்லை போல் இருக்கிறது. என் மைத்துனர் சூர்யா முருகன் உள்ளே தான் இருக்கிறார் கூப்பிடுங்க அவனை என்று முருகனின் அம்மாவிடம் சண்டை போட்டுள்ளார். முருகனின் அம்மா ஆம்பளை

இல்லாத நேரத்தில் ஏன் சத்தம் போடுகிறாய் என்று கேட்டுள்ளார். அப்போது என் மைத்துனர் சூாயா முருகனின் அமமாவை அடிக்க எதிர் வீட்டில் இருந்த ரவியின் சைக்கிளை எடுக்க சென்றுள்ளார். அதற்கு ரவி உள்ளே இருநது ஏன்டா என் சைக்கிளை எடுக்கிறாய் என்று கேட்டுள்ளார். ரவிக்கும் என் மைத்துனருக்கும் வாக்குவாதம் வந்துள்ளது. உடனே ரவி வீட்டிற்குள் சென்று ஒருகம்பை எடுத்து வந்து என் மைத்துனர் சூர்யாவை அடிக்க வந்துள்ளார். பக்கத்தில் இருந்த நரேஷ் அந்த கம்பை பிடுங்கி விட்டுள்ளார். கீழே விழுந்த கம்பை ரவி எடுத்து என் மைத்துனர் சூர்யாவை அடிக்க வந்துள்ளார். அதற்கு சூர்யா கம்பை பிடுங்கி கீழே போட்டுவிட்டார். ஆம்பளையா இருந்தா ஒன்டிகொண்டி வாடா என்று என்மைத்துனர் சூர்யா ரவியை பார்த்து சொல்லியுள்ளார். ரவி என்னையா ஆம்பளையா என்று கேட்கிறாய் என்று சொல்லி வீட்டிற்குள் சென்று ஒருஅரிவாளை எடுத்து வந்துஉன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்நு சொல்லி என்மைத்துனரின் வலது புற பின்கழுத்தில் அரிவாளால் வெட்டியுள்ளார். சூர்யாவின் அலறல் சத்தம் கேட்டு நான் ஓடினேன். அப்போது ரவி சூர்யாவின் மூக்கில் ரவி அரிவாளால் வெட்டினார். நான் வெட்டாதே வெட்டாதே கத்தி கொண்டே ஓடினேன். பலத்த காயம் அடைந்ததால் என்மைத்னுர் சூர்யா கீழே விழுந்துவிட்டார். அதை பார்த்து ரவி அங்கியிருந்து ஓடிவிட்டார். நானும் சூர்யாவின்மற்ற நண்பர்களும் ஒரு ஆட்டோவில் ஏற்றி கும்பகோணம்அரசுமருத்துவமனைக்கு கொண்டு வந்தோம். அங்கு முதலுதவி செய்தார்கள். சூர்யா போடடியிருந்த பனியன், சட்டை, கைலி ஆகிய ரத்தக்கறை படிந்திருந்தை என்னிடம் கொடுத்தார்கள். அதன்பிறகு என் மாமனாரும் சிவராமனும் அங்கு வந்தார்கள். அவர்கள் மேல்சிகிச்சைக்காக கும்பகோணம் சுகம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனார்கள், அங்கு பார்க்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள், ஆகவே தஞ்சாவூர் கே.ஜி மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸில் கொண்டு போனார்கள். கே.ஜிமருத்தவமனையில் அட்மிட் செய்வதற்கு முன்பே டாக்டர்கள் இறந்து விட்டார் என்று சொன்னார்கள். பிறகு அதே ஆம்புலன்ஸில் குப்மகோணம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தோம். அங்கு போஸ்ட் மார்ட்டம் செய்வதற்காக பிணவறையில் வைத்தார்கள்.அதன்பிறகு நாங்கள் வீட்டிற்கு சென்றுவிட்டோம். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். ஆஜர் எதிரியை தெரியும்.

(சான்று பொருளை குறியீடு செய்ய சாட்சியம் நிறுத்தி வைக்கப்படுகிறது.)

.